1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் ; இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(7) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) 1972–73 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1972–73ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைளை பேரவையில் மொழிய ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

'In pursuance of Article 203, Clause (3). of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Excess Expenditure for the year 1972-73'

(8) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்— 1972–73, வாக்கெடுப்பு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன். 1972–73ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 47 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ் வொன்றிற்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1972–73ஆம் ஆண்டிற் கான மிகைச் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற 1972–73ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் விவரம்.

(1)		(2)	(3) (ரூபாய்)
கோரிக்கை	1	நிலவரித் துறை	2,10,418
ஷை	4	முத்திரைத் தாள்கள்— நிர்வாகம்.	9,17,631